UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19 - 4 Oct - Dec 2025

Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நாட்டுப்புறப் பாடல்களில் பெண்கள்

**க. ஜெகதீஸ்வரன்**
முனைவர் பட்ட ஆய்வாளர்

**முனைவர் ம. தங்கராசு**
உதவிப் பேராசிரியர், நெறியாளர், முதுகலை தமிழாய்வுத்துறை
பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

**ஆய்வுச் சுருக்கம்**

நாட்டுப்புற இலக்கியம் என்பது எழுத்தறிவற்ற மக்களின் கலை வடிவமாக இருந்து, அவர்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் உண்மையான கண்ணாடிபோல் வெளிப் படுத்துகிறது. அவற்றில் முக்கியப் பங்கு வகிப்பது நாட்டுப்புறப் பாடல்கள். இப்பாடல்கள் இயற்கை, தொழில், பண்டிகை, உறவுகள், சமூக மரபுகள் போன்றவற்றுடன் நெருங்கிய தொடர்புடையவை. குறிப்பாக, பெண்களின் வாழ்க்கை அனுபவங்கள், சமூக நிலை, உழைப்பு, துயரம், மகிழ்ச்சி ஆகியவை நாட்டுப்புறப் பாடல்களில் செறிவாகப் பிரதிபலிக்கின் றன. தாலாட்டு, நலங்குப் பாடல், ஒப்பாரிப் பாடல், காதல், திருமண, இல்லற மற்றும் தொழிற்பாடல்கள் ஆகியவை பெண்களின் பல்வேறு வாழ்க்கை பரிமாணங்களை வெளிக் கொணர்கின்றன. இப்பாடல்கள் பெண்களின் உழைப்பையும் மன உறுதியையும் மட்டுமல்லாமல், குடும்ப அமைப்பு, உறவுநிலை, காதல், திருமணம், தாய்மை, தொழில் பங்களிப்பு போன்ற அம்சங்களில் அவர்கள் ஆற்றிய பங்குகளை வெளிப்படுத்தும் சமூக ஆவணங்களாக அமைகின்றன. எனவே, நாட்டுப்புறப் பாடல்கள் பெண்களின் சமூக வரலாற்றைப் பதிவு செய்த உணர்வுக் களஞ்சியமாகக் கருதப்படுகின்றன.

**முதன்மைச் சொற்கள்**

- நாட்டுப்புறப் பாடல்கள்
- தாலாட்டு
- நலங்குப் பாடல்கள்
- ஒப்பாரிப் பாடல்கள்
- காதல் பாடல்கள்
- திருமணப் பாடல்கள்
- இல்லறப் பாடல்கள்
- தொழிற்பாடல்கள்
- சமூக வரலாறு

நாட்டுப்புற இலக்கியம் என்பது மக்கள் வாழ்வின் உள்நிலைச் சிந்தனைகளையும், வெளிப்படையான பண்பாட்டுப் பண்புகளையும் பிரதிபலிக்கும் உயிரோட்டமிக்க கலை வடிவமாகும். **“நாட்டுப் பாடல்கள் ஏழைகளின் இலக்கியம்; கல்லாத மக்களின் கற்பனைச் செல்வம்; ஏடும் எழுத்தும் அறியாத மக்களின் இதய ஒலி.”**[1] இது எழுதப்பட்ட இலக்கியமாக

இல்லாமல், வாய்மொழி வழியாகத் தலை முறை தலைமுறைகளாகப் பரவி வந்ததால், சமூக வரலாற்றின் உண்மையான கண்ணாடி யாகவும் கருதப்படுகிறது. தமிழ் நாட்டின் நாட்டுப்புறப் பாடல்கள் இயற்கையைச் சுற்றிய வாழ்க்கை, உழைப்பு, உறவுகள், பண்டிகைகள், வாழ்வியல் சுழற்சி ஆகிய வற்றை மிக நெருக்கமாகப் பதிவு செய்கின் றன. இதில் பெண்களின் பங்களிப்பு மிக முக்கியமானதாகும். அவர்கள் குடும்பம், பொருளாதாரம், சமூக மரபுகள் ஆகிய வற்றில் ஆற்றிய பங்குகள் பாடல்களில் தத்ரூபமாகத் தோன்றுகின்றன. பெண்கள் குறித்த பாடல்கள், அவர்களின் அன்றாட உழைப்பையும், மகிழ்ச்சியையும், துயரத்தை யும் மட்டுமல்லாமல், சமூகத்தில் அவர்கள் பெற்றிருந்த இடத்தையும் வெளிக்கொணர் கின்றன.

“**ஒரு நாட்டு மக்களின் அக, புற வாழ்க்கையைக் காட்டும் கண்ணாடியாக இருப்பவை நாட்டுப்புற இலக்கியங்கள் ஆகும். நாட்டுப்புற இலக்கியங்களில் அவ் விலக்கியத்திற்குரிய மக்களின் மொழிநடை, கற்பனை, வெளியீட்டு முறை, இசை எனப் பல கூறுகள் பொதிந்திருக்கும்.**”[2] என்பது மு.இளங்கோவன் தரும் விளக்கம்.

### நாட்டுப்புறப் பாடல்களும் வளர்ச்சி நிலைகளும்:

ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுவது, நாட்டுப் புறப்பாடல்கள் பொதுவாக இனிமையும் துன்பமும் போன்ற அடிப்படை மனித உணர்வுகளின் தாக்கத்தால் உருவாகியிருக்க வாய்ப்பு உள்ளது. நாட்டுப்புற இலக்கியத் தின் ஒரு முக்கிய பகுதியாக இவை கருதப்படுகின்றன. இப்பாடல்கள் நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சூழலோடு நெருங்கிய தொடர்பில் இருந்து, அவர்களின் மனநிலை களையும், சமூக உணர்வுகளையும் வெளிப் படுத்தும் இயல்பான ஒரு வாயிலாக அமைகின்றன. மேலும், ஒவ்வொரு இனக் குழுவின் வாழ்க்கைமுறை, நாகரிக வளர்ச்சி, பழக்கவழக்கங்கள், சமூக நெறிமுறைகள் மற்றும் வரலாற்றுப் பின்புலத்தைத் தன்னகத்தே பிரதிபலிக்கும் ஆவணங்களாக இவை செயல்படுகின்றன. “**கல்லாதவர் பாடும் நல்ல பாடல்களே நாட்டுப் பாடல்கள்**”[3] கல்லாத மக்களால் இயைந்து, அவர்களின் வாழ்வியல் அனுபவங்களையும், உணர்வு களையும் பிரதிபலிக்கும் நல்ல பாடல்களே 'நாட்டுப்பாடல்கள்' எனப் பரிமாணிக்கப் படுகின்றன என்று மு. வை. அரவிந்தன் குறிப்பிடுகிறார்.

நாட்டுப்புறவியல் அறிஞர்கள் நாட்டுப்புறப் பாடல்களின் இயல்புகளாக வழங்கிய விளக்கங்களை மு. வை. அரவிந்தன் தம் நூலில் பட்டியலிட்டுள்ளார். அவை, “**1.எழுத்தறிவற்ற நாட்டுப்புற மக்களிடையே தொன்றுதொட்டு வழங்கி வருபவையகவும், 2.இயற்றியவர் பெயர், காலம் ஆகியவற்றைக் கூற இயலாததாயும், 3.செவி வழியாகவே தலைமுறைதோறும் நீடித்து வருபவையா கவும், 4.எழுத்து வடிவத்தில் யாரும் எழுதி வைக்காமலும், 5.நிலையான வடிவம் இன்றியும் அமைவதாகவும்.**”[4] நாட்டுப்புறப் பாடல்கள் முதன்முதலில் யாரோ ஒரு தனிநபரால் பாடப்பட்டு, பின் சமுதாயம் முழுமைக்கும் உரியதாய் அமைகின்றன.

வரலாற்று ஆதாரங்கள் காட்டும் படி, தொன்மைக்காலத் தமிழர்கள் நாட்டுப்புறப் பாடல்களை பாடுவதிலும், கேட்பதிலும் தனித்துவமான ஆர்வம் கொண்டிருந்தனர். இருப்பினும், ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்பட்ட காலத்திலிருந்து நாட்டுப்புறப் பாடல்களை தொகுத்து ஆவணப்படுத்தும் பணியில் அறிஞர்கள் தீவிரமாக ஈடுபட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. சமூக மாற்றங் களின் தாக்கத்தால், நாட்டுப்புற மக்கள் புதிய பாடல்களை உருவாக்கி, மக்களின் உணர்வுகளையும் சமூக நிலைகளையும் பிரதிபலித்தனர். நாட்டுப்புற மக்களின் பேச்சு வழக்குச் சொற்களும், குறைந்த அளவு இலக்கிய மொழி கூறுகளும் இணைந்த பாடல்கள், நாட்டுப்புற மக்களை மட்டுமின்றி அனைத்துத் தரப்பு மக்களையும் ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளன என்பது ஆய்வாளர்களால் வலியுறுத்தப்படுகிறது.

### நாட்டுப்புறப் பாடல்களும் பெண்களும்

பெண்கள் ஆண்களைவிட உடலமைப்பிலும் மென்மையும், குரலிலும் நளினமும் தனித்துவமாக வெளிப்படுகின்றனர். நாட்டார் சமூகத்தில், பாடல்களை பாடுவதிலும் ஆண்களைவிட பெண்கள் அதிகமாக ஈடுபட்டுள்ளனர் என்பது ஆய்வின் முக்கிய மான விடையாகக் கருதப்படுகிறது. பாடும்

வாய்ப்புகளும், சூழலும் பெண்களுக்கு அதிக அளவில் வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது. தாலாட்டு, நலங்குப் பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் போன்றவை பெண்களால் மட்டுமே பராமரிக்கப்பட்ட பாடல்களாக நாட்டுப் புறவியல் ஆதாரங்களில் காணப்படுகின்றன. மேலும், பெண்களின் பிறப்பு, விளையாட்டு, சடங்கு, குடும்ப வாழ்வு, குழந்தைப் பேறு, உறவுநிலைகள், தொழில்கள் மற்றும் இழப்புப் அனுபவங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் நாட்டுப்புறப் பாடல்களுக்குள் பதிவு செய்யப்பட்டுள்ளன. எனவே, பெண் களின் வாழ்க்கை வரலாறு மற்றும் சமூக அனுபவங்களைப் புரிந்துகொள்ள நாட்டுப் புறப் பாடல்கள் அவசியமான ஆதாரமாக கருதப்படுகின்றன.

## மகளிரும் குடும்பமும்

ஒவ்வொரு மனிதரும் குடும்பம் எனும் சமூக அமைப்பின் வழியாகத் தனது அடையாளத் தை உருவாக்கிக் கொள்கிறார். குடும்ப அமைப்பின் சீர்குலையாத நிலையை உறுதிப் படுத்த, உறவுநிலைகளிலும் உரிமைகளி லும் ஆண், பெண் இருவரும் நியாயச் செயல்பாட்டை கடைப்பிடிக்க வேண்டியது அவசியமாகும். சமூகத்தில் பல்வேறு உறவு நிலைகள் காணப்பட்டாலும், குடும்ப அமைப்பின் அடிப்படை உறவுகள் பெற்றோர் களும், குழந்தைகளும் ஆகும். தமிழகச் சமூகத்தில் கூட்டுக் குடும்பமும் தனிக் குடும்பமும் வாழ்க்கை முறைகளாக நிலவி யுள்ளன என்பது ஆய்வுக்குரிய முக்கிய விடையாகும். இவ்விரு குடும்ப அமைப்பு களிலும் பெண்கள் எதிர்கொண்ட நிலைப் பாடுகள், துன்பங்கள் மற்றும் வாழ்வியல் அனுபவங்கள் நாட்டுப்புறப் பாடல்களின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, பெண்களின் குடும்பவாழ்வு நிலைகளைப் புரிந்துகொள்ள நாட்டுப்புறப் பாடல்கள் மிக முக்கியமான ஆதாரங்களாகக் கருதப் படுகின்றன. **“ஒரே மரபுவழி சார்ந்த உறவு டைய இருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட வர்களோ ஒரே வீட்டில் ஒரே தலைமையின் கீழ் தங்கள் மனைவியர்களுடனும் குழந்தை களுடனும் கூடி வாழ்தலையே கூட்டுக் குடும்பம்”**[5] என்றழைப்பர்.

## காதல் பாடல்களில் பெண்டிர்

ஆண் மற்றும் பெண் தங்களின் உடல் மற்றும் மன ஒத்துழைப்பின் அடிப்படையில் களவு வாழ்வில் ஈடுபட்டு, திருமணம் செய்து கற்பு வாழ்வை முன்னேற்றுவது சங்காலக் காதல் முறையின் முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது. நாட்டுப்புற இலக்கியங் களில் காதல் பாடல்கள் பெரும்பாலானவை இருப்பது ஆய்வுகள் காட்டுகின்றன. குறிப்பாக, காடுகள் மற்றும் கழனிகளில் வேலை செய்யும் சூழலில் ஆணும் பெண்ணும் பழகி ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொள்வது வழக்கமான நிகழ்வாகும். மேலும், இந்தச் சூழலில் காதல் உறவுகளை உருவாக்குவதற்கு பணம், சாதி அல்லது சமூகக் கட்டுப்பாடுகள் பெரும் தடையாக அமைகின்றன என்பதும் நாட்டுப்புறக் கலைச் சான்றுகளால் உறுதிப்படுத்தப் படுகிறது. **“தலைவன், தலைவியரின் உடல் வருணனை, உறவுமுறை, காத்திருப்பு, திருமணத்திற்கு முன்பு சேர்ந்து பேச நினைப்பது, பெண்மறுப்பது, உடன்போக்கு மறுப்பு, பரத்தையர் தொடர்பு, கள்ளக்காதல், நிறைவேறாத காதல், பிரிவுத் துன்பம், சேர்ந்திருப்பதில் மகிழ்ச்சி, காதலனின் அன்பு கிடைக்காத பெண்ணின் வேதனை, பெண்ணின் அன்பு கிடைக்காத காதலனின் வேதனை முதலான கூறுகளை விளக்கும் வண்ணம் பல நாட்டுப்புறக் காதல் பாடல் கள் உள்ளன.”**[6] உறவுகளுக்குள்ளேயே காதல் மலர்வதும் உண்டு. இதனை,

**“அத்தை மகள் மத்தானி! அவல் இடிக்கிற குந்தாணி!**

**மாமன் மகள் மத்தானி! மா இடிக்கிற குந்தாணி!”**[7]

என்ற பாடல்வழி அறியமுடிகிறது. நாட்டுப்புற மக்களிலே காதல் வெகு இயல்பாயும், எதார்த்தமாயும் நிகழ்ந்துள்ளதாகக் கருத முடிகிறது.

## திருமணப் பாடல்களில் மகளிர்

தமிழ்நாட்டில் பெரும்பாலான குடும்பங்கள் ஆண் தலைமைக்கு உட்பட்டதாகவே அமைந்துள்ளன. திருமணத்திற்குப் பிறகு, பெண் தனது கணவரின் வீட்டுச் சூழலுக்கு ஏற்ப வாழ்வதற்கும் பழக்கமிடுவதற்கும் சமூகநிலை கருதப்படுகிறது. திருமணப் பாடல்களில், பெண் அழைப்பு, சீதனம், வாழ்த்துப்பாடல்கள், நலங்குப் பாடல்கள்

போன்ற வகைகள் காணப்படுகின்றன, அவை திருமணச் சூழலையும், சமூக நெறி முறைகளையும் பிரதிபலிக்கும் அடையாளங் களாக அமைகின்றன.

"வாராண்டி வாராண்டி
வரிசை கொண்டு வாராண்டி
பாக்கு எடுத்துக்கிட்டு
பரியாய் கொண்டு வாராண்டி
புத்தம் புதுச் சேலை
பொன்னான சவரி பண்ணி
தடம் புடிச்சி வாராண்டி
சந்தனப் பொட்டழகன்
சாஞ்ச நடையழகன்
கூறை சீலை கொண்டுகிட்டு
குதிரை ஏறிவாராண்டி"[8]

இந்த பாடல், திருமணத்திற்கு முன்பாகத் தாலி பூட்டு நிகழ்ச்சியைச் செய்த பிறகு, மணமகன் குடும்பத்தாரும் மணமகனையும் அழைத்து பெண்ணின் வீட்டிற்கு வருவதை விவரிக்கின்றது. மேலும், இந்த வருகையைச் சிறப்பிக்கும் வகையில், மணப்பெண்ணின் வீட்டில் கூடியிருக்கும் பெண்கள் புதிய மணமகளை அலங்கரித்து, பாடல் மூலம் வாழ்த்துக்களை வெளிப்படுத்துகின்றனர்.

### இல்லறப் பாடல்கள்

கணவன் வீட்டில் பெண் சமைக்கத் தொடங்குவதை அழகியலோடு ஒரு பாடல் தெரிவிக்கிறது.

"முச்சிவைத்து முறம்வைத்து
மூன்றிற்கு ராட்டை வைத்து
(ராட்டை- நூல் நூற்கும் ஒரு கருவி)

பானை கரி கழுவி
பன்னீர் உலைவைத்து
தென்னல் அரிசியைத்
தீட்டிச் சமைத்து வைத்து
ஆக்கினாள் சோறுகறி
அலரிப்பூத் தன்னிறமாய்!
பொங்கினாள் சோறுகறி
பொரசம்பூத் தன்னிறமாய்!"[9]

இப்பாடல், ஒரு பெண் பிறந்து வளர்ந்து ஒரு வீட்டிலும், மணமுடித்து கணவன் இல்லத்தில் வாழ்க்கையைத் தொடர்வதும் வழக்கமாகிப் போனதை நாட்டுப்பாடல்கள் உணர்த்துகின்றன. மகளிர் எத்தனை கல்வி கற்றாலும், இல்லறக் கலையில் தேர்ச்சி பெறாவிட்டால் அவர்களுக்கு வாழ்க்கையே நரகமாகிவிடும், அச் சூழலைச் பாடலொன்று உணர்த்துகிறது.

"கான மிளகா வச்சு
கறிக்கு மசால் அரைச்சுக்கூட்டி
குழம்பு ஒரைச் சுதுண்ணு
கொல்லுதாரே கதவடைச்சு!
படிச்சவண்ணு தெரிஞ்சிருந்து
பாவி மகன் என்னைக் கூட்டி
கூழுக் காய்ச்சத் தெரியலேன்னு
குறுக் கொடியக் கொல்லு தாரே!"[10]

இப்பாடல், ஆக்கத் தெரியாத பெண்ணின் அவதி நிலையை வெளிப்படுத்துகிறது. **"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது"** எனும் பழமொழியின் கருத்தைப் போல, பெண்கள் மெத்தப்படித்தாலும் இல்லறப் பணிகளைச் செவ்வனே ஆற்றாவிட்டால், அவர்கள் சமூகத்தில் விமர்சனங்கள் மற்றும் ஏச்சுப் பேச்சுகளுக்கு ஆளாக முடியும்.

### தாலாட்டுப் பாடல்கள்

நாவை அசைத்துப் பாடப்படும் தாலாட்டு, உலகின் எவ்வுயிருக்கும் இசை மயக்கத்தை உருவாக்கும் ஒரு நிகழ்வாகும். இந்தப் பாடல்கள் பெரும்பாலும் தாயின் சொந்த உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. மேலும், குழந்தைகளைப் பற்றிய எதிர்காலக் கற்பனைகள், குழந்தையைப் பெற்றல் தொடர்பான நோன்புகள், குடும்பத்தாரால் நடத்தப்பட்ட விதிமுறைகள் போன்றவை தாயின் தாலாட்டில் பிரதிபலிக்கப்படுகின்றன. **"தாயின் அன்பையும் சேயைச் சுற்றி எழும் கற்பனையையும் பாடலாக வழங்கும் பாட்டுருவம் தாலாட்டாகும்"**[11] என்பார் நா.வானமாமலை.

### தொழிற் பாடல்களில் பெண்கள்

மனிதன் உண்டு உறங்கி உயிர் வாழ அடிப்படையாக இருப்பது தொழில், சமூகச் சூழல்களுக்கேற்பவும் உணவு அடிப்படையிலும் தொழில்கள் அமைகிறது. **"ஆண்களின் வேலை பொருளீட்டிக் குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றுதல் எனவும், பெண்களின் கடமை குழந்தைகளைப் பெற்று வளர்த்துக் குடும்பப் பொறுப்புக் களையும் நிறைவேற்றுதல் எனவும் சமூகம் வரையறுத்துள்ளது"**[12] பெரும்பாலான உழைக்கும் வர்க்கத்தில் பெண்கள்

ஆண்களைவிட குறைந்த ஊதியத்தில் வேலை செய்யும் நிலை காணப்படுகிறது. அவர்கள் செய்யும் தொழில்களில் சுண்ணச் சாந்து அரைத்தல் (சுண்ணாம்பு), பூப்பறிப்பு, மலர்மாலை தொடுப்பு, நெல் குற்றுதல், நாற்று நடுதல், கதிர்களைப் பறவை ஓட்டிக் காத்தல், களையெடுத்தல் மற்றும் கதிரறுத்தல் போன்ற பணிகள் அடங்கும்.

காலம் காலமாக, எழுத்தறிவு இல்லாத மக்களால் வாய்மொழி வழியாகப் பரப்பப் பட்ட இப்பாடல்கள், இன்று நம்மைத் தொட்டடையக் கூடிய வரலாற்றுச் சின்னங் களாக விளங்குகின்றன. இதில் பெண்களின் பங்கு வியப்பூட்டும் வகையில் உள்ளது. தாலாட்டு, நலங்குப் பாடல், ஒப்பாரிப் பாடல், காதல் பாடல், திருமணப் பாடல், இல்லறப் பாடல், தொழிற் பாடல் எனப் பெண்கள் வாழ்வின் ஒவ்வொரு பருவத்தை யும், ஒவ்வோர் உணர்வையும், சமூகத்தில் அவர்கள் வகித்த இடத்தையும், இப்பாடல் கள் நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றன. அன்றாட உழைப்பின் நடுவே பாடிய பாடல்கள், அவர்களின் துயரத்தையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்ளும் ஆறுதலாகவும், சமூக அங்கீகாரத்தை நிலைநாட்டும் ஊடகமாகவும் இருந்தன. பெண்களின் குரலில் ஒலித்த நாட்டுப்புறப் பாடல்கள், குடும்ப அமைப்பு, உறவுநிலை கள், காதல், திருமணம், இல்லறம், தாய்மை, தொழில்முறை பங்களிப்பு எனப் பல்வேறு துறைகளில் அவர்கள் ஆற்றிய பங்குகளை அழியாத சான்றுகளாகச் சேமித்து வைத்துள்ளன. நாட்டுப்புறப் பாடல்கள் என்பது பெண்களின் வாழ்க்கைச் சுவடுகளைப் பதிவு செய்துள்ள உணர்வுக் களஞ்சியம்; அது பெண்களின் உழைப்பை யும், கலை நயத்தையும், மன உறுதியை யும், சமூக வரலாற்றையும் பல்லாண்டு களுக்கு முன்னும் பின்னும் இணைக்கும் பாலமாக விளங்குகிறது. இப்பாடல்களைப் பாதுகாப்பது என்பது, ஒரு சமூகத்தின் பண்பாட்டு அடையாளத்தையும், அதன் வரலாற்று நினைவுகளையும் பாதுகாப்பதற்கு இணையான உயரிய செயல் ஆகும்.

**சான்றெண் விளக்கம்**

1. மு.வை.அரவிந்தன், தமிழக நாட்டுப்பாடல்கள், ப.12.
2. மு.இளங்கோவன், நாட்டுப்புறவியல், ப.16.
3. மு.வை.அரவிந்தன், தமிழக நாட்டுப்பாடல்கள், ப.11.
4. மேலது, பக்.15-16.
5. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல், ப.58.
6. மு.இளங்கோவன், நாட்டுப்புறவியல், பக்.72-73.
7. மு.வை.அரவிந்தன், தமிழக நாட்டுப்பாடல்கள், ப.86.
8. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.284.
9. மு.வை.அரவிந்தன், தமிழக நாட்டுப் பாடல்கள், ப.109.
10. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், ப.301.
11. மேலது, ப.81.
12. ச.முத்துச்சிதம்பரம், தமிழக நாட்டுப்புறவியலில் பெண்கள், ப.41.

**துணைநூற்பட்டியல்**

1. மு.வை.அரவிந்தன், தமிழக நாட்டுப் பாடல்கள்(1998), மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. மு.இளங்கோவன், நாட்டுப்புறவியல் (2006), வயல்வெளிப் பதிப்பகம், கங்கை கொண்ட சோழபுரம்.
3. ச.முத்துச்சிதம்பரம், தமிழக நாட்டுப் புறவியலில் பெண்கள்(2005), முத்துப் பதிப்பகம், திருநெல்வேலி.
4. ஆறு. இராமநாதன், நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல் (1982), மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.
5. நா.வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள் (2012), நியூ செஞ்சுரி புக் ஹௌவுஸ்(பி)லிச்., சென்னை.